**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 513** **நாள்: 26.09.2026**

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

இன்று (26.09.2026) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, வளசரவாக்கம் , அம்பத்தூர், மணலி, தண்டையார்பேட்டை மண்டலங்களில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைத்தல், கணேசபுரத்தில் மேம்பாலப் பணிகள் உள்ளிட்ட பணிகளையும், நேப்பியர் பாலம் பகுதியில் உள்ள கூவம் ஆறு கடலில் சேரும் முகத்துவாரப் பகுதியில் மணல் திட்டுகள் அகற்றும் பணிகள், கூவம் ஆற்றில் கரையில் முன்மாதிரி பணியாக கரைகளை மேம்படுத்துதல், செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நடுதல், பொதுமக்களுக்கான நடைபாதை அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாகவும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள், வளசரவாக்கம் மண்டலத்தில் வார்டு-143, முகப்பேர் சாலையில் கூக்சன் சாலை முதல் கூவம் ஆறு வரை (From Cookson Road to Cooum River) நீர்வளத்துறையின் சார்பில் ரூ.130 கோடி மதிப்பீட்டில் 5.10 கி.மீ. நீளத்தில் கட்டப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினைப் பார்வையிட்டார். இத்திட்டத்தில், இதுவரை 3.15 கி.மீ. பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகளை விரைவுபடுத்தி, வருகின்ற அக்டோபர் மாத இறுதிக்குள் நிறைவு செய்திடவும், இப்பணிகள் நிறைவடையும் வரை, கனமழையை சமாளிக்கவும், நீர்த்தேக்கம் ஏற்படும் அபாயத்தைத் தடுக்கவும் தேவையான நீரகற்றும் நடவடிக்கைகளை திட்டமிட்டு செயல்படுத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, அம்பத்தூர் மண்டலத்தில் கொரட்டூர் சந்திப்பில், வடக்கு அவென்யூ உபரிநீர் சென்று சேரும், கிழக்கு அவென்யூ பகுதி முதல் ஓட்டேரி நல்லா வரையில் மாநகராட்சியின் சார்பில் ரூ.44 கோடி மதிப்பீட்டில் 2.5 கி.மீ. நீளத்தில் கட்டப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் தற்போது 2 கி.மீ. பணிகள் நிறைவடைந்துள்ளன. நடைபெற்று வரும் பணிளை 15.10.2026க்குள் முடித்திடவும், அருகிலுள்ள சாலைகளில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்குமாறும், வடிகால் பணிகள் நிறைவடைந்தவுடன் சாலை சீரமைப்புப் பணிகளை முழுமையாக மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், மாதவரம் மண்டலம், வார்டு-23, மாதவரம் ரெட்ஹில்ஸ் நெடுஞ்சாலையில் மாநகராட்சியின் சார்பில் ரூ.18 கோடி மதிப்பீட்டில் 1.16 கி.மீ. நீளத்தில் நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதுவரை 1.03 கி.மீ. நீளத்திற்கு பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகளை இம்மாத இறுதிக்குள் முடித்திடவும், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற அக்டோபர் 15ஆம் தேதிக்கு முன்னதாக சாலை சீரமைப்புப் பணிகளை முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, தண்டையார்பேட்டை மண்டலம், கணேசபுரத்தில் ரூ.226.55 கோடி மதிப்பீட்டில் 678 மீ. நீளம் மற்றும் 15.20 மீ. அகலத்தில் கட்டப்பட்டு வரும் உயர்மட்டப் பாலப் பணிகளையும், கணேசபுரம் சுரங்கப்பாதையில் தேங்கும் மழைநீரை சேகரித்து வெளியேற்றிடும் வகையில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் 2 நீர் சேகரிப்பு கிணறு அமைக்கும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, தேனாம்பேட்டை மண்டலம், நேப்பியர் பாலம் பகுதியில் உள்ள கூவம் ஆறு கடலில் சேரும் முகத்துவாரப் பகுதியில் நீர்வளத்துறையின் சார்பில் ட்ரெட்ஜர் இயந்திரம் (Dredger) மூலம் மணல் திட்டுகள் அகற்றும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, சென்னை நதிகளை புனரமைத்து அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ், நேப்பியர் பாலம், கூவம் ஆற்றில் வலது கரையில் முன்மாதிரிப் பணியாக கரைகளை மேம்படுத்துதல், செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நடுதல், பொதுமக்களுக்கான நடைபாதை அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாகப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அறிவுரைகள் வழங்கினார்.

இந்த ஆய்வுகளின் போது, மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் திரு.விவேகானந்தன், இ.ஆ.ப., திரு.டி.கிறிஸ்துராஜ், இ.ஆ.ப., இணை ஆணையாளர் (பணிகள்) திரு. செ. சரவணன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர். கௌஷிக், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் திரு. சங்கரவேலு, கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.பிரபாகரன், திரு.திருமாறன், திரு.சொக்கலிங்கம், நீர்வளத்துறை கண்காணிப்புப் பொறியாளர் திரு.மாரியப்பன், செயற்பொறியாளர் திரு.ஜி.ஆர். இராதாகிருஷ்ணா, திரு.கார்த்திகேயன், சென்னை நதிகள் புனரமைப்பு நிறுவனத்தின் கண்காணிப்பு பொறியாளர் திரு.எம்.ஆர்.ஜெயசங்கர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**